**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 375/2014 |
| Deposition of witness | | PW-7/LW-9 |
| Name | | கோபால்<br>சிறப்பு உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father’s/Husband Name | | பாபு சிங் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of August 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடுகாவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.11.2016 அன்று பணி ஓய்வு பெற்ற பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு மதுக்கூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 25.05.2014 ஆம் தேதியில் நான் நிலைய பொறுப்பில் இருந்த போது பட்டுக்கோட்டை காவல்நிலையத்தில் இருந்து கொடுக்கப்பட்ட தகவலின்படி வாட்டாக்குடி தெற்கு கிராமத்தை சேர்ந்த தனக்கோடி மகன் ராமச்சந்திரன் வயது 47 என்பவர் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றிருப்பதாகவும், அதன்பின் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் இருந்து தொலைபேசி மூலம்

கிடைக்கப்பெற்ற தகவலின்படி தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அசா1 ராமச்சந்திரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்பு நிலையம் வந்து அன்றைய தினம் மதியம் 15.00 மணிக்கு நிலைய குற்ற எண் 115/2014, சட்டப்பிரிவுகள் 294(b), 324., 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்கு உதவி ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். நான் பதிந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அசாஆ 6** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- க.சத்யா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.